32 ஆம் பேரவைத்தமிழ் விழா
சிகாகோ தமிழ்ச்சங்கப் பொன்விழா

# 10–ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## 2019–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 3 முதல் 7 வரை, சிகாகோ

பெருமதிப்புக்குரிய தமிழ் அறிஞர் பெருமக்களே,

வணக்கம். உலகத் தமிழ் ஆய்வு மன்றம் (IATR) தொடங்கப்பட்ட 1964-ஆம் ஆண்டு முதல் இதுவரை 9 உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன. நடைபெற்ற மாநாடுகளில் பெரும்பாலானவை அரசியல் தொடர்போடும் அரசாங்கத் துணையோடும் நடத்தப்பட்டன. மன்றத்தின் முதன்மையான நோக்கமான தமிழ் ஆய்வுக்கு முதலிடம் கொடுத்து அடுத்துவரும் 10-ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிகாகோவில், 2019-ஆம் ஆண்டு, சூலைத் திங்கள் 3 முதல் 7-ஆம் நாள் வரை நடைபெற உள்ளது. இந்த மாநாடு அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணையோடும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (FeTNA) மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் (CTS) ஒத்துழைப்போடும் நடைபெற இருக்கின்றது.

உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் முதன்மையான நோக்கம்:

> "பொதுவாகத் திராவிடம் பற்றியும் சிறப்பாகத் தமிழ் பற்றியும் செய்யப்படும் ஆய்வுகள் பல்வேறு துறைகளில் அறிவியல் முறையில் செய்வதற்கான ஊக்குவித்தலும், இவற்றோடு தொடர்புடைய பிறத்துறைகளில் ஆய்வுகள் செய்து வரும் அறிஞர் பெருமக்களோடும், உலக நிறுவனங்களோடும் நெருங்கிப் பங்குக்கொள்ளுதலும் ஆகும்."

இம்மன்றத்தின் தலையாய நோக்கமே 10-ஆம் உலகத் தமிழ் மாநாட்டின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது: "தமிழினம், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் தொன்மையை, புது வரலாற்றியல் நோக்கிலும், அறிவியல் அடிப்படையிலும், ஒப்பியல் முறையிலும் ஆய்வு செய்தல்." இவை பற்றிய உண்மைகளை உலகம் அறிதல் வேண்டும் என்பது இம்மாநாட்டின் தலையாய குறிக்கோள்.

இத்துடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சி தலைப்புகள் இம்மாநாட்டின் அடிப்படை நோக்கத்தைப் பல்வேறு கோணங்களில் விரிவுபடுத்திக் காட்டுபவை. ஆராய்ச்சித் தலைப்புகளும், ஆராய்ச்சிக் கட்டுரைச் சுருக்கத்தையும் (Abstract), ஆராய்ச்சி முழுக்கட்டுரையையும் (Full Research paper), அனுப்ப வேண்டிய முறைகளும், இம்மடலுடனும், மாநாடு பற்றிய கணினி அறிவிப்பிலும் கண்டுகொள்ள வேண்டுகிறோம். அறிஞர்கள் சிறந்த ஆராய்ச்சிகளைச் செய்து முடிக்க விழைகின்றோம்.

நீங்கள் இந்த ஆய்வுகளைச் சிறப்பாகச் செய்யவும், உங்களை மாநாட்டில் காணவும் விழைகின்றோம். மீண்டும் நன்றி, வணக்கம்.

அன்புடன்

**புலவர், முனைவர் பிரான்சிசு ச. முத்து**

பொதுச் செயலாளர், அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றம்

தலைவர், ஆய்வுக் குழு

10-ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

# 10–ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு
# 2019–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 3 முதல் 7 வரை, சிகாகோ
# (ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தலைப்புகள்: சுருக்கம்)

2019-ஆம் ஆண்டு, சூலைத் திங்கள் சிகாகோவில் நடைபெற உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிறப்பு நோக்கங்கள்; தமிழில் உள்ள செவ்விலக்கியங்களை உலகிற்கு அறிமுகப் படுத்துதல்; தமிழர், தமிழ் மொழி, இலக்கியங்கள், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் பழமையும், தனிச்சிறப்பையும் ஆய்வு செய்தல் ஆகியவை ஆகும். அத்துடன் தமிழ் அறிஞர் பெருமக்கள் தற்கால தமிழ் உரைநடை, பாடல்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்ய வேண்டும் என இந்த மாநாடு ஊக்குவிக்கின்றது. இந்நோக்கங்கள் சிறப்புற, வெற்றிபெற, கீழ்கண்ட தலைப்புகளில் ஆழ்ந்த ஆய்வோடு அழகுற எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், இம்மாநாட்டில் இடம்பெற வரவேற்கப்படுகின்றன.

## ஆராய்ச்சிப் பிரிவுகள்

1. செவ்விலக்கியங்கள் (சங்க இலக்கியங்கள்)
2. தமிழரின் பழங்கால நாகரிகம்
3. தொல்காப்பியம்
4. திருக்குறள்
5. அறிஞர் பெருமக்களைப் பற்றிய ஆய்வு
6. தமிழ் இசையும் கலைகளும்
7. தற்காலத் தமிழ் இலக்கியங்கள்
8. தமிழ் மொழியும் மொழியியலும்

## தலைப்புகள்

1. செவ்விலக்கியங்கள்
    - தமிழ்ச் செவ்விலக்கியங்களும் பிறமொழிச் செவ்விலக்கியங்களும்: ஒரு ஒப்பீடு.
    - சங்க இலக்கியங்கள் தமிழ்ப் பண்பாட்டின் கருவூலம்
    - சங்க இலக்கியங்கள் காட்டும் தமிழக வரலாறு

2. தமிழரின் பழங்கால நாகரிகம்
    - மரபியல் (Genetics), மரபியல் வழிமுறை (Genographics) அடிப்படையில் தமிழர் தோற்றமும் பரவலும்

- தமிழ் நாகரிகத்தின் பழைமையை வரலாறு, அகழ்வாய்வு, நிலவியல் ஆகியவைக் காட்டும் ஆதாரங்களோடு ஆய்வு செய்தல்
- சிந்துவெளி நாகரிகம் பற்றிய புதிய கண்டுபிடுப்புகள். சிந்துவெளியோடு தமிழ் நாகரிகம் ஆகிய பிற நாகரிகங்களை ஒப்பிடுதல்
- தென்னிந்தியாவில் உள்ள ஆதிச்சநல்லூர், பொருந்தல், கீழடி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அகழ்வாய்வுச் சான்றுகளும் பழங்கால தமிழர் நாகரிகமும்.
- தமிழரின் பழங்கால நாகரிகம் பற்றிக் கல்வெட்டுகள், மாந்தஇயல் ஆதாரங்கள்

3. தொல்காப்பியம்

- தொல்காப்பியமும் பிறமொழி இலக்கியங்களும்: ஒரு ஒப்பாய்வு
- ஐந்திணைக் கருத்துக்களும் அகப்பொருள் மரபும்
- தொல்காப்பியத்தில் இடைச்செருகல்
- தொல்காப்பியக் காலம்

4. திருக்குறள்

- திருவள்ளுவர், "உலக மக்களின் அறநூல் புலவன்." ("The Bard of Universal man" Dr. G.U. Pope).
- திருக்குறள் பண்டைத்தமிழர்தம் பண்பாட்டு நாகரிகக் கருவூலம்.
- திருக்குறள் தற்கால வாழ்க்கைக்கும் வழிகாட்டும் அறநூல்
- திருக்குறளும் பிறமொழியில் உள்ள அறநூல்களும்; ஒரு ஒப்பாய்வு
- பிற நாடுகளில் திருக்குறளுக்கு வரவேற்பு

5. அறிஞர் பெருமக்களைப் பற்றிய ஆய்வு

- அறிஞர் பெருமக்கள் பழங்கால, இடைக்கால, மற்றும் தற்காலத் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகிய இவற்றின் ஆய்வுகளுக்குத் தந்த பெரும் பங்களிப்பு (ஒவ்வொருவர் பங்களிப்பையும் தனிப்பட ஆய்வு செய்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவும். அறிஞர் பெருமக்கள் பெயர்களை ஆராய்ச்சித் தலைப்புகளின் விரிவில் பார்க்கவும்).

6. தமிழ் இசையும் கலைகளும்

– தமிழ் இசை, கலைகள்; இவற்றின் படிமை

– கருநாடக இசையில் தமிழ் இசையின் தாக்கம்

– படிங்காலத்தில் வழங்கிய தமிழ் இசைக் கருவிகள்

– தற்காலத் திரைப்படப் பாடல்களில் சங்க இலக்கியப் பாடல்களின் தாக்கம்

7. தற்காலத் தமிழ் இலக்கியங்கள்

– தமிழ் உரைநடை, செய்யுட்கள் (பாடல்கள்); இவற்றின் தற்கால போக்கு

– தற்கால நாவல்களும் சிறுகதைகளும்; இவற்றின் புதிய போக்கு

– தமிழ்க்கல்விக்கும் ஆய்வுக்கும் கணினி பயன்படும் வகைகள்: ஓர் ஆய்வு.

8. தமிழ்மொழியும் மொழியியலும்

– தொல்காப்பியம்: அதில் பொதிந்துள்ள மொழியியல் நுணுக்கங்களும் இலக்கியக் கோட்பாடுகளும்.

# 10–ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## 2019–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 3 முதல் 7 வரை, சிகாகோ

## (ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தலைப்புகள்: விரிவு)

2019-ஆம் ஆண்டு, சூலைத் திங்கள் சிகாகோவில் நடைபெற உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சிறப்பு நோக்கங்கள்; தமிழில் உள்ள செவ்விலக்கியங்களை உலகிற்கு அறிமுகப் படுத்துதல்; தமிழர், தமிழ் மொழி, இலக்கியங்கள், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் பழமையும், தனிச்சிறப்பையும் ஆய்வு செய்தல் ஆகியவை ஆகும். அத்துடன் தமிழ் அறிஞர் பெருமக்கள் தற்கால தமிழ் உரைநடை, பாடல்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்ய வேண்டும் என இந்த மாநாடு ஊக்குவிக்கின்றது. இந்நோக்கங்கள் சிறப்புற, வெற்றிபெற, கீழ்கண்ட தலைப்புகளில் ஆழ்ந்த ஆய்வோடு அழகுற எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், இம்மாநாட்டில் இடம்பெற வரவேற்கப்படுகின்றன.

### 1. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் அல்லது சங்க இலக்கியங்கள்:

1. தமிழ்ச் செவ்விலக்கியங்களைப் பிறமொழிச் செவ்விலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்தல்:
2. புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய பிற தமிழ்ச் செவ்விலக்கியங்கள் தமிழர்ப் பண்பாட்டுக் கருவூலங்கள்.
3. செவ்விலக்கியங்களில் இயற்கை.
4. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பெண்கள்.
5. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் காட்டும் பண்டைத் தமிழகத் தாழ்நிலைக் குடிமக்கள்.
6. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் காட்டும் பழங்காலக் கல்விநிலை.
7. இலக்கியமே வரலாறு அல்லது வரலாறே இலக்கியம்; இக்கோட்பாட்டினைப் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய செவ்விலக்கியங்கள் மூலம் ஆய்வு செய்தல்.

### 2. தமிழ் நாகரிகத்தின் பழமையும் அது உலகெலாம் பரவிய வகையும்;

1. தமிழர்த் தோற்றத்தையும் அவர் உலகெலாம் பரவிய வகையும் மரபியல் மூலமும் (genetics) மரபியல் காட்டும் வழிமுறை வகையிலும் (genographics) ஆய்வு செய்தல்.
2. தமிழ்ச் சங்கங்களும் தமிழர் நாகரிகமும் வளர்ந்த குமரி நாடு அல்லது குமரிக் கண்டம் ஒன்று இருந்தமையை, வரலாறு, இலக்கியம், அகழ்வாய்வு (archeology), நிலவியல் (geology) போன்ற அறிவியல் சான்றுகளோடு நிறுவ ஆய்வு செய்தல்.
3. பழந்தமிழர்ப் பாண்பாட்டினைக் கீழே காணும் பழம்பெரும் பண்பாடுகளோடு ஒப்பாய்வு செய்தல்.
   - அ) எகிப்தியர் பண்பாடு.
   - ஆ) எபரேயர் பண்பாடு.

இ) கிரேக்கர் பண்பாடு.

ஈ) ரோமையர் பண்பாடு.

உ) சீனர் பண்பாடு.

4. உலகத்தின் படிம்பெரும் நாகரிக வளர்ச்சியில் தமிழரப் பங்கீடு (contribution); கீழுள்ள நாகரிகம் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்க.

அ) சிந்துவெளி நாகரிகம்.

ஆ) சுமேரிய நாகரிகம்.

இ) மெசபட்டோமியா, அக்கேடின் நாகரிகம்.

ஈ) எகித்திய நாகரிகம்.

உ) மத்தியதரைக்கடல் நாகரிகம்.

5. படிந்தமிழர் நாகரிகம் குறித்து இராசு அடிகளாரின் (Rev. Fr. Heras S.J.) கண்டுபிடுப்புகள்.

6. படிந்தமிழர் நாகரிகம் குறித்து பேராசிரியர் அசுகோ பொர்போலாவின் (Asko Parpola) கண்டுபிடுப்புகள்.

7. படிந்தமிழ் நாகரிகம் குறித்து புதுச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் இராசன் அவர்களின் அகழ்வாய்வு கண்டுபிடுப்புகள்.

8. தென்னிந்தியாவில் ஆதிச்சநல்லூர், பொருந்தல், கீழடி முதலிய பிற இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள்.

## 3. தொல்காப்பியம்

1. தொல்காப்பியமும் தற்கால மொழியியலும்.
2. தொல்காப்பியர் காலம்.
3. தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள்.
4. ஐந்திணைக் கருத்தும் தமிழின் அகப்பொருள் மரபும்.
5. தொல்காப்பியமும் கீழே காணும் பிறமொழி இலக்கண நூல்களும்: ஒரு ஒப்பாய்வு. இவற்றில் ஒன்றினை தேர்வு செய்து ஆய்வு செய்க.

அ) கிரேக்க இலக்கண நூல்கள்.

ஆ) இலத்தீன் இலக்கண நூல்கள்.

இ) எபரேய இலக்கண நூல்கள்.

ஈ) வடமொழி இலக்கண நூல்கள்.

உ) கன்னட இலக்கண நூல்கள்.

ஊ) தெலுங்கு இலக்கண நூல்கள்.

எ) மலையாள இலக்கண நூல்கள்.

ஏ) பிறமொழி இலக்கண நூல்கள் (மொழியைக் குறிப்பிடுக).

6. தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை:

தொடர்ந்துவரும் தமிழ் இலக்கண மரபுகள்.

## ௪. திருக்குறள்

1. திருவள்ளுவர், “உலக மக்களின் அறநூல் புலவன்” (‘The Bard of Universal Man’ Dr. G U Pope).
2. திருக்குறள் பண்டைத்தமிழர்தம் பண்பாட்டு நாகரிகக் கருவூலம்.
3. திருக்குறளும் வாழும் வழிமுறைகளும் (the art of living).
4. திருக்குறள், தற்கால வாழ்க்கைக்கும் வழிகாட்டும் அறநூல்.
5. திருக்குறளும் கீழே காணும் பிற அறநூல்களும்: ஒப்பாய்வு. கீழுள்ள ஒன்றினைத் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்க.

    அ) கிரேக்க அறநூல்கள்.

    ஆ) இலத்தீன் அறநூல்கள்.

    இ) வடமொழி அறநூல்கள்.

    ஈ) பிறமொழி அறநூல்கள் (குறிப்பிடுக).
6. திருக்குறளுக்கு பிற நாடுகளில் இருக்கும் வரவேற்பு: ஆய்வு.

## 5. அறிஞர் பெருமக்களை பற்றிய ஆய்வு

1. கீழ்கண்ட அறிஞர் படிங்கால, இடைக்கால, மற்றும் தற்காலத் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகிய இவற்றின் ஆய்வுகளுக்குத் தந்த பெரும் பங்களிப்பு (ஒவ்வொருவர் பங்களிப்பையும் தனிப்பட ஆய்வு செய்து ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவும்).

    அ) மறைமலை அடிகளார்.

    ஆ) விபுலானந்த அடிகளார்.

    இ) தனி நாயக அடிகளார்.

    ஈ) பரிதிமாற் கலைஞர்.

    எ) தேவநேயப் பாவாணர்.

    ஏ) கமில் சிலபில் (Kamil Zvelebil).

    உ) ஏ கே இராமநுசன் (A K Ramanujan).

    ஊ) ஆர் கு அசர் (R K Asher).

    ஐ) சார்சு ஆர்ட் (George Hart).

    ஔ) பிற அறிஞர் பெருமக்கள் (யார் என்று குறிப்பிடுக).

## ௬. தமிழ் இசையும் கலைகளும்

1. தமிழ் இசை, கலைகள்: இவற்றின் படிமை
2. கருநாடக இசையில் தமிழ் இசையின் தாக்கம்
3. படிங்காலத்தில் வடிங்கிய தமிழ் இசைக் கருவிகள்

4. தற்கால திரைப்படப் பாடல்களில் சங்க இலக்கியப் பாடல்களின் தாக்கம்

## 7. தற்காலத் தமிழ் இலக்கியங்கள்

1. தமிழ் உரைநடை, செய்யுட்கள் (பாடல்கள்): இவற்றின் தற்காலப் போக்கு
2. தற்கால நாவல்களும் சிறுகதைகளும்; இவற்றின் புதிய போக்கு
3. தமிழ்க்கல்விக்கும் ஆய்வுக்கும் கணினி பயன்படும் வகைகள்: ஓர் ஆய்வு.

## 8. தமிழ்மொழியும் மொழியியலும்

1. தொல்காப்பியம்: அதில் பொதிந்துள்ள மொழியியல் நுணுக்கங்களும் இலக்கியக் கோட்பாடுகளும்.

## ஆராய்ச்சிக் கட்டுரையின் சுருக்கமும் (abstract) ஆராய்ச்சி விரிவுக் கட்டுரையும் அனுப்பும் முறைகள்

1. ஆராய்ச்சிக் கட்டுரை எங்கும் இதுவரை வெளியிடப்படாத முழுமுதல் ஆராய்ச்சிக் கருத்துகள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
2. ஆராய்ச்சியாளர்கள் "ஆராய்ச்சி விரிவுக் கட்டுரையை" அனுப்பும் முன்னர் அதன் சுருக்கத்தினை முதலில் அனுப்ப வேண்டும். இந்தச் சுருக்கம் "மைக்ரோசாப்ட்" சொல் செயலியில் (Microsoft Word) இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் "யுனிகோடு" முறையில் (unicode format) இருத்தல் வேண்டும்.
3. ஆராய்ச்சிச் சுருக்கம் நவம்பர் 30, 2018 ஆம் தேதிக்குள் பின்வரும் மின்னஞ்சல் வழியாக அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சல் முகவரி "academic-committee@icsts10.org". பெறப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைச் சுருக்கங்கள் ஆய்வறிஞர் குழுவினரால் (academic committee) சீராய்வு செய்யப்பட்டு அந்த கட்டுரைச் சுருக்கம் ஏற்புடையதா இல்லையா என்ற முடிவுகள் டிசம்பர் 31, 2018 தேதிக்குள் அறிவிக்கப்படும்.
4. ஏற்கப்பட்ட ஆராய்ச்சி சுருக்கத்தின் ஆசிரியர்கள் தங்களது ஆராய்ச்சி விரிவுக் கட்டுரையை மார்ச் 31, 2019 ஆம் தேதிக்குள் அனுப்புதல் வேண்டும். இந்தக் கட்டுரை "மைக்ரோசாப்ட்" சொல் செயலியில் (Microsoft Word) முப்பது பக்கங்களுக்கு மிகாமல், "யுனிகோடு" முறையில் (unicode format), எழுத்தளவு 12-ஆக இருத்தல் வேண்டும். ஆராய்ச்சிக் கட்டுரைச் சுருக்கம், ஆராய்ச்சி விரிவுக் கட்டுரை ஆகிய இரண்டும் தமிழிலோ ஆங்கிலத்திலோ இருத்தல் வேண்டும்.
5. ஆராய்ச்சியாளர்கள் தங்களது வாழ்க்கைக் குறிப்பினை (biodata/resume), 200 சொற்களுக்கு மிகாமல் ஆராய்ச்சிக் கட்டுரையின் சுருக்கத்தோடு இணைத்து அனுப்புதல் வேண்டும்.
6. ஆய்வரங்கில் படைக்கப்படுகின்ற கட்டுரைகளின் எண்ணிக்கை, ஆராய்ச்சியாளர்கள் விவரங்கள் ஏப்ரல் 30, 2019 ஆம் தேதிக்குள் தெரியப்படுத்தப்படும். கட்டுரையாளர் அனுமதி கட்டணம், தங்கும் செலவு, உணவு செலவு, மாநாடின் போது ஏற்படுகின்ற உள்ளூர் போக்குவரத்து செலவு ஆகியவற்றை விழாக் குழுவினர் ஏற்றுக்கொள்வர்.
7. ஆய்வரங்கில் பங்கேற்கும் ஆராய்ச்சியாளர்கள் தங்களது சொந்த செலவிலோ அல்லது அரசு,கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனக்களின் முதலியன தரும் பொருள் உதவியாலோ தங்களது பயணச் செலவிற்கான ஏற்பாடுகள் செய்து கொள்வதை வரவேற்கின்றோம். பயணச்செலவு பற்றிய மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

8. ஆராய்ச்சியாளர்கள் தங்களது கடவுச்சீட்டினை (Passport) ஏப்ரல் *30,* 2019 ஆம் தேதிக்குள் பெற்று வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் குறித்த நேரத்தில் அமெரிக்கா நுழைவுச்சான்று (Visa) பெற உதவியாக இருக்கும்.
9. ஆராய்ச்சியாளர்கள், மாநாட்டின் பொது தேவைப்படும் எதிர்பராரது வரக்கூடிய மருத்துவ செலவிற்கு தேவைப்படும் விதமாக, தங்களுக்கான மருத்துவ காப்பிட்டினை (Insurance) முன்னரே வாங்கி வைத்திருக்க வேண்டும்.
10. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் மாநாட்டின் இணையத் தளத்தில் வெளியிடப்படும். ஆய்வரங்கில் படைக்கப்படுகின்ற கட்டுரைகள் மட்டும் மாநாட்டு மலரில் இடம் பெறும்.